**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.121/2019**

**பி.வா.சா. –1–மணிமாலா**

**நாள். 14.03.2025**

**பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் வலவிசெட்டியபட்டி என்றால் என்னை திருமணம் செய்து கொடுத்தது ஊர் வலவிசெட்டியபட்டி ஆகும். தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். ராஜலெட்சுமி ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஏல சீட்டு நடந்தி வந்து, அதில் ஏலம் எடுத்த வகையில் நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன். தாவா புரோநோட்டை வழக்கு நிலுவையில் இருக்கும் போது பார்த்தேனா என்றால் பார்த்தேன். கடவூர் தாலுகா கோட்டைகரை என்ற ஊருக்கும், சுக்கம்பட்டி என்ற ஊருக்கும் சுமார் 2 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சாட்சி தற்போது 2 கி.மீ, 6 கி.மீ என்று எனக்கு தெரியாது. நான் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் சரிதான். மேற்படி தொழில் சம்பந்தமாக கடன் வாங்கி திருப்பி செலுத்தும் பழக்கமுடையதா என்றால் இல்லை. அய்யலூர் பாலமுருகன் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் நான் சீட்டு போட்டு பணம் செலுத்ததாக புகார் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் பாலமுருகன் பைனான்சிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வாதி தினகரன் கடவூர் ஜமீன்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ராஜலெட்சுமி என்பவரிடம் எவ்வளவு சீட்டு பணம் போட்டேனா என்றால் சரிதான். அதன் முதிர்வு தொகை ரூ.40,000/–மா என்றால் சரிதான். மேற்படி சீட்டு தொகை எத்தனை தவணையில் செலுத்த வேண்டும் என்றால் 20 தவணைகளாகும். அதன் மாத சந்தா எவ்வளவு என்றால் ஞாபகமில்லை. சீட்டு தொகையை எந்த மாதத்தில் நான் எடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. அதற்கான ரசீதுகள் எதுவும் இல்லை. சீட்டுக்கான பாஸ்புக் எதுவும் இல்லை. நான் முழு தொகை செலுத்திய பின்னரும் தாவா புரோநோட்டை தரவில்லை என்றால் சரிதான். அதனை திரும்ப பெறும் வகைக்கு அறிவிப்பு எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. ராஜலெட்சுமி எனது உறவினர் என்றால் சரிதான். ராஜலெட்சுமி என்பவர் தினகரனை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை அனுமானத்தில் சொல்கிறேனா அல்லது நேரடியாக தெரியுமா என்றால் ராஜலெட்சுமியும் ராதாகிருஷ்ணனும் சொன்னதால் சொல்கிறேன். தினகரன் தாவா புரோநோட்டை பணம் கொடுத்து ராஜலெட்சுமியிடம் பெற்றார்களா என்றால் எனக்கு தெரியாது. தினகரன் ரூ.15,00,000/– கனரா வங்கியில் கடன் பெற்றுள்ள விபரம் நேரடியாக தெரியுமா என்றால் அவரை யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி

ராஜலெட்சுமி அரசு ஊழியர் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெற்று புரோநோட்டில் ராஜலெட்சுமிக்கு நான் கையொப்பம் செய்யும் போது எனது மகன்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள் வேறு யாருமில்லை. நானும் ராஜலெட்சுமியும் நெருங்கிய உறவினர் என்பதால் நான் தினகரனிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்தாமல் இருக்கும் வகைக்கு பொய்யாக தாவா புரோநோட்டு குறித்து சாட்சியம் வழங்குகிறேன் என்றால் சரியல்ல. நான் ரூ.20,00,000/– கடனை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதிக்கொடுத்துவிட்டு மேற்படி கடனை திருப்பி செலுத்தக் கூடாது என்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.14 17:54:07 +0530

Additional District Judge(FAC),

Dindigul.